| 11 | 29 | பு | ஆரம்பம் | 32 | 43 |
| 12 | 30 | வி | ரோகி | 30 | 44 |

**ரேவதியினது தாராபலமில்லாத நாட்கள்**

| மே | வை | வார | நட்சத் | நாடி | விநாடி |
|---|---|---|---|---|---|
| 14 | 1 | பு | பரணி | 14 | 58 |
| 15 | 2 | வி | ஆரம்பம் | 12 | 21 |
| 16 | 3 | வெ | ரோகி | 10 | 32 |
| 17 | 4 | ச | ஆரம்பம் | 9 | 45 |
| 18 | 5 | ஞா | திருவா | 10 | 0[illegible] |
| 21 | 8 | பு | ஆரம்பம் | 18 | 25 |
| 22 | 9 | வி | மகம் | 23 | 30 |
| 24 | 11 | ச | ஆரம்பம் | 35 | 36 |
| 25 | 12 | ஞா | அத்தம் | 41 | 00 |
| 26 | 13 | தி | ஆரம்பம் | 48 | 12 |
| 27 | 14 | செ | சுவாதி | 53 | 44 |
| ஜூன் 3 | 21 | செ | ஆரம்பம் | 3 | 30 |
| 4 | 22 | பு | திருவோ | 1 | 16 |
| 6 | 24 | வெ | ஆரம்பம் | 50 | 50 |
| 7 | 25 | ச | உத்ரட் | 46 | 45 |
| 9 | 27 | தி | ஆரம்பம் | 38 | 59 |
| 10 | 28 | செ | பரணி | 35 | 29 |
| 11 | 29 | பு | ஆரம்பம் | 32 | 43 |
| 12 | 30 | வி | ரோகி | 30 | 44 |

படுகுழியில் விழுவதற்கே பலரையும் உம்
பக்கம் இழுக்கப் பார்க்கின்றீர்
கொடுமையது கூறுகின்றீர் கொள்கை யில்லாமல்
பிதற்றுகிறீர் பிழைக ளென்று
படுபக்ஷி பகலிரவு குறித்திருக்கின்றீர்
பாமரரை ஏமாற்றும் வழி இதுவோ
நடுநிசியில் நாள் பிறக்கும் கணிதத்திற்கு
நன்மை யென்று கருதியோ.

## சகலருக்குமுரிய ரௌத்திரிவருஷ வைகாசிமாத தினபலன்கள்

| நக்ஷத்திரம் | மே 14 வை 1 | மே 15 வை 2 | மே 16 வை 3 | மே 17 வை 4 | மே 18 வை 5 | மே 19 வை 6 | மே 20 வை 7 | மே 21 வை 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| அச்சுவினி, ஆயிலியம், அனுஷம், பூரட்டாதி. | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலைச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் |
| பரணி, மகம், கேட்டை, உத்தரட்டாதி. | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலைச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் |
| கார்த்திகை, பூரம், மூலம், ரேவதி. | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலைச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் |
| ரோகிணி, உத்தரம், பூராடம். | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலைச்சல் | செலவு | இலாபம் |
| மிருகசீரிடம், அத்தம், உத்தராடம். | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலைச்சல் | செலவு |
| திருவாதிரை, சித்திரை, திருவோணம். | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலைச்சல் |
| புநர்பூச, சுவாதி, அவிட். | அலைச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் |
| பூசம், விசாகம், சதயம். | சௌக்கியம் | அலைச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் |

| நக்ஷத்திரம் | மே 22 வை 9 | மே 23 வை 10 | மே 24 வை 11 | மே 25 வை 12 | மே 26 வை 13 | மே 27 வை 14 | மே 28 வை 15 | மே 29 வை 16 |
|---|---|---|---|---|---|---|---|---|
| அச்சுவினி, ஆயிலியம், அனுஷம், பூரட்டாதி. | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலைச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் |
| பரணி, மகம், கேட்டை, உத்தரட்டாதி. | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலைச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் |
| கார்த்திகை, பூரம், மூலம், ரேவதி | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலைச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் |
| ரோகிணி, உத்தரம், பூராடம். | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலைச்சல் | செலவு | இலாபம் |
| மிருகசீரிடம், அத்தம், உத்தராடம். | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலைச்சல் | செலவு |
| திருவாதிரை, சித்திரை, திருவோணம். | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலைச்சல் |
| புநர்பூச, சுவாதி, அவிட். | அலைச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் |
| பூசம், விசாகம், சதயம். | சௌக்கியம் | அலைச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐ ஸ்வம் |

# சகலருக்குமுரிய ரௌத்திரிவருஷ வைகாசிமாத தினபலன்கள்

| நக்ஷத்திரம் | மே 30 வை 17 | மே 31 வை 18 | யூன் 1 வை 19 | யூன் 2 வை 20 | யூன் 3 வை 21 | யூன் 4 வை 22 | யூன் 5 வை 23 | யூன் 6 வை 24 |
|---|---|---|---|---|---|---|---|---|
| அச்சுவினி, ஆயிலியம், அனுஷம், பூரட்டாதி. | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலேச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் |
| பரணி, மகம், கேட்டை, உத்தரட்டாதி. | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலேச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் |
| கார்த்திகை, பூரம், மூலம், ரேவதி. | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலேச்சல் | செலவு | இலாபம் |
| ரோகிணி, உத்தரம், பூராடம். | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலேச்சல் | செலவு |
| மிருகசீரிடம், அத்தம், உத்தராடம். | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலேச்சல் |
| திருவாதிரை, சித்திரை, திருவோணம். | அலேச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் |
| புநர்பூச, சுவாதி, அவிட். | சௌக்கியம் | அலேச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் |
| பூசம், விசாகம், சதயம். | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலேச்சல் | செலவு | இலாபம் | கஷ்டம் | கஷ்டம் | கிலேசம் |

| நக்ஷத்திரம் | யூன் 7 வை 25 | யூன் 8 வை 26 | யூன் 9 வை 27 | யூன் 10 வை 28 | யூன் 11 வை 29 | யூன் 12 வை 30 | யூன் 13 வை 31 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அச்சுவினி, ஆயிலியம், அனுஷம், பூரட்டாதி. | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலேச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் | —— |
| பரணி, மகம், கேட்டை, உத்தரட்டாதி. | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலேச்சல் | செலவு | இலாபம் | —— |
| கார்த்திகை, பூரம், மூலம், ரேவதி. | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலேச்சல் | செலவு | —— |
| ரோகிணி, உத்தரம், பூராடம். | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலேச்சல் | —— |
| மிருகசீரிடம், அத்தம், உத்தராடம். | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | சௌக்கியம் | —— |
| திருவாதிரை, சித்திரை, திருவோணம். | அலேச்சல் | செலவு | இலாபம் | சந்தேர்ஷம் | கஷ்டம் | கிலேசம் | ஐஸ்வரியம் | —— |
| புநர்பூச, சுவாதி, அவிட். | சௌக்கியம் | அலேச்சல் | செலவு | இலாபம் | சந்தோஷம் | கஷ்டம் | கிலேசம் | —— |
| பூசம், விசாகம், சதயம். | ஐஸ்வரியம் | சௌக்கியம் | அலேச்சல் | செல்வு | இலாபம் | சந்தேர்ஷம் | கஷ்டம் | —— |

# எண்கள்புரியும் விந்தைகள் பாரீர்!

ஆ. சிவராசா பி: ஏ., பி. பில், ( சோதிடர், வேலணைகிழக்கு, வேலணை )

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, ஆகிய எண்களை இரண்டு கண்களாலும் கவனமாக உற்றுப்பாருங்கள். உலகில் பிறக்கின்ற அத்தனை மனிதர்களையும் இந்த ஒன்பது எண்களுக்குள்ளும் அடக்கி 31 திகதிகள் வரைக்கும் பிறக்கும் மணிதர்களை 9 எண் காரர்களாக வகுத்து அவர்களின் வாழ்க்கைக்கும் இந்த எண்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைக்காணலாம். 1, 10, 19, 28, ஆகிய திகதிகளில் பிறப்போர் 1ம் எண்காரர் எனப்படுவர். 1 என்ற அடையாளத்தைப் பாருங்கள், கோணலின்றி நிமிர்ந்து இரும்புக்கம்பிபோல வளையாது இருக்கு மாப்போல் தோன்றுகின்றது. நடைமுறை வாழ்க்கையில் 1ம் எண்காரரைப் பாருங்கள், இவர்கள் எவருக்கும் கீழ்ப்பணிய மாட்டார்கள், பிடிவாத்குண மிருக்கும் யார் என்ன சொன்னலும் நான் பிடித்தமுயலுக்கு மூன்று கால்தான் என்று அடம் பிடிப்வர்கள் இவர்களே தலைவணங்காத்தன்மயம் தலைமை தாங்கும் மனப்பாங்கும் பிடிவாத குணமும் 1ம் எண்காரருடன் கூடப் பிறந்தவை.

2 என்ற எண்ணைப்பாருங்கள். கேள்விக்குறி மாதிரி 2 எண் ஏறத்தாள அமைந்துள்ளது. 2, 11 20, 29, ஆகிய திகதிகளில் பிறப்பவர்கள் 2 எண்காரர் எனப்படுவர். வாழ்க்கையில் சிக்கல்களும், சந்தேகமனப்பான்மையும். கற்பனையில் பறக்கும் சுபாவமும். தோல்விகளைக்கண்டவுடன் சுருண்டு சோர்வடைந்து கேள்விக்குறி போல உடலே இந்த எண்காரர்களுக்கு கூனிக்குறுகிவிடும். சூரியனில் இருந்துதான் சந்திரன் ஒளியை எதிர்பார்ப்பது போல சந்திர எண்ணன இரண்டு எண்காரர்களும் தமது வாழ்க்கையில் வசந்தம் வாராதா......? என எதிர்பார்த்திருப்பார்கள்

3 எண்ணை இடமிருந்து வலமர்க பார்த்தால் தூரத்தே பறக்கும் பறவையின் சாயல் தென்படும். 3 எண்காரரும் அதாவது 3 12 21, 30 ஆகிய திகதிகளில் பிறப்போரும் உலகில் உயர்வடைய வேண்டும். என்ற பெரு விருப்புடன் உயர உயரப் பறக்க ஆசைப்படும் பறவைகள் போல முன்னேற சதாபாடுபடுவர். 3 எண்ணை மேலிருந்து கீழாகப் பாருங்கள். ஒரு நீண்டகம்பியை அடித்து வளைத்தது போன்றிருக்கும், 3 எண்காரரும் தமது நோக்கத்தை அடைவதற்கு காலில் விழுந்து. காக்காய் பிடிப்பர். வளைந்த கம்பி நிமிர்வது போன்று இவர்களும் திடீரெனச் சர்வாதி காரிகளாகவும் மாறிவிடுவர்.

தடிகளை வைத்து தாறு மாருகக்கட்டியது போன்ற அமைப்பை நாலு என்ற எண் பிரதி பலிப்பதைப்பார்ககலாம். 4 எண்கார்ரர்கள் 4, 13, 22, 31, ஆகிய திகதிகளில் பிறப்பவர்கள் பிறருக்கு உதவி செய்யப்புறப்பட்டு (எய்தவனையே திரும்ப வந்து சேரும் பூமராங் எனப்படும் அவுஸ்திரேலிய ஆயுதம் போன்று) உபத்திரவத்தையும் அடிபிடி சண்டைகளையும் ஏற்படுத்தும். தாறுமாருக நாலாபுறமும் மனம் நிம்மதியின்றியும். பெரும்பாலான நாலு எண் காரரின் வாழ்வு இடைவிடாத மனக்குரோதம், பகைமைகளிலும் உழன்ற வண்ணமே இருக்கும்,

5 எண் நபர்கள் பிறரைக் கைதூக்கிவிடும் கொழுக்கிகள். ஹோட்டல் முதலாளிகள், மற்றும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களின் முன்னேற்றத்திற்கு 5, 14, 23 திகதிகளில் பிறந்த 5 எண்காரர்களே துணையாக இருப்பது வியப்புக்குரியதல்ல. 5 எண்ணை அறிவுக்கண் கொண்டு பாருங்கள். மேலே கிடையாக ஆசனமும், கீழே வளைந்த கொழுக்கியும் போன்ற உருவமைப்பையும் கொண்டுள்ளது, 5 எண்காரர்கள் பிறரை உயர்ந்தஸ்தானத்தில் வைத்து விடுவார்கள், யாரரிவது வர்த்தக நிலையங்கள் நடாத்த விரும்பின் 5 எண் காரர் களைத் தெரிந்தெடுத்து வேலைக்கமர்த்தினல் கூடிய சீக்கிரம் முன்னுக்கு வரமுடியும். சதா சமூகப் பணி என்று திரியும் அரசியல் தாசர்கள் தொட்டக்கம் கடைச்சிப்பந்தி வரை 5 எண் காரர்கள் பிறரை வாழ்விக்க, உயர்த்தப்பாடு பட்டுக்கொண்டே இருப்பார்கள்.

6- ஆறு ஆறு மனமே ஆறு ஆறு எண்காரரைக் கண்டால் ஆறு. 6 எண் கலைஞானம் கொண்டது. 1 எண்ணுக்குரிய பிடிவாத குணம் 6 க்கு இருந்தாலும் இவர்களின் மீது

எவராவது தூய அன்பு காட்டினால் உடனே இவர்கள் அன்புக்கு கட்டுப்பட்டு கருண்டு போய் விடுவார்கள். ஆறு எண்ணின் அடிப் பாகத்தைப் பார்த்தீர்கள் தானே? உறுதியான கட்டி கீழ்ப்பக்கம் சுருண்டிருப்பது போன்ற அமைப்பினை 6 எண் கொண்டுள்ளது. ஆறு எண் இசை ஞானம் மிக்கதாதலின் ஆறு எண் கலைஞர்களைக்கண்டதும மக்கள் அவர்களின் இசை ஞானத்தில் ஆறுதலும் அமைதியும் பெறுவதையும் எடுப்பாக வந்தவர்கள் பின் ஆறு போல் வளைந்து திருப்பு வதையும் 6 எண்ணின் விசேடதன்மைகள். 6, 15, 24 ஆகிய திகதிகளில் பிறப்பவர்கள் 6 எண் காரர்களாகும்.

சோதனைகள்தான் உன்வாழ்க்கையில் அலையாக வரப்போகின்றது எழு, விழி, பாய்ந்து படையெடுத்து எதிரியைத்தாக்க ஆயத்தமாவது போல் சோதனை வெல்வதற்கு தயாராக இரு என எச்சரிக்கின்றது. 7 எண் எண் 2 போன்ற சாயலில எண் 7ம் கேள்விக்குறி போலே தென்படுகின்றது வாழ்க்கை என்னும் வெள்ளத்தில் தாங்கள் அடித்துச் செல்லப்படாமல் இருக்க, தாங்கள் தங்குவதற்கு ஒரு பாறை வேண்டுமென இறைவனை வேண்டும் பாணியில் இரண்டு கைகளினாலும் வணங்கும் நிலையிலும் அம்புக்குறிபோல இலட்சியபுருடர்களாக வாழ்ந்து காட்ட விரும்புகின்றனர். 7, 16, 25 ஆகிய திகதிக்காரர் 7 எண்காரர் ஆவர்.

8 எட்டு, திட்டு, முன்னேற விடாத கட்டு இந்த எண் பரிதாபத்திற்குரியதென்று பெரும்பாலும் கருதப்படுகின்றது. ஒரு மனிதனின் விருப்பங்கள், தேவைகளை அவன் அடைய விடாது விதியென்ற கயிற்றினால் கட்டப்பட்டிருக்கும். விதி வழி வாழ்க்கையை அமைக்கும் 8 எண்காரர் இந்த எண்ணின் அமைப்புப்போன்று உலக வாழ்க்கையில் படாதபாடுபட்டு மேலது கீழாய் கீழது மேலாய் எப்படித்தான் நல்ல நிலைக்கு வந்தாலும் திடீரென தலைகீழாக வீழ்ந்து விடுவர். 8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறப்போர் (8 எண்காரர்களே. ஒரு வட்டத்தின் பரிதிகளில் இருக்கும் இரண்டு புள்ளிகளை இணைத்து ஒன்றாகக்கட்டி இருப்பதைப்போன்ற அமைப்பை 8 எண் கொண்டுள்ளது)

9, 18 27 ஆகிய திகதிகளில் பிறப்பவர்கள் 9 எண்காரர்கள் எனப்படுவர். 9 எண் செவ்வாய்க்கிரகத்திற்குரியது. 9 எண் „கை முஷ்டி„ யின் அமைப்பினை ஒத்துள்ளது; கோபங்கொண்டவர் கைவிரல்களை ஒன்று சேர்த்து பிறருக்கு ஓங்கிக்குத்து வதையும் மேலிருந்து கீழாகப் பார்க்குமிடத்து 9 எண் சுடுபடைக்கல அமைப்பினையும் கொண்டு விளங்குவதையும் காணலாம். 9 எண்காரரை மிகமிகச் சுலபமாக இனங்கண்டு கொள்ள முடியும். முன்கோபக்காரர், பருத்த தேகிகள் மிதமிஞ்சிய சூட்டுடம்பையும் கொண்டிருப்பதுடன எடுத்தவுடன் முன்பின் யோசிக்காது உடன் கை நீட்டி விடுவார். எவ்வளவு விரைவாகக் கோபங்கொள்வாரோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரமாக ஆறிவிடுவார்கள்.

இன்றைய இளைய தலைமுறையினர் மத்தியில் எண் சோதிடக்கலை மின்னலிலும் வேகமாகப்பரவி வருகின்றதைக் காணலாம். வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கியிருக்கும் இன்றைய மனிதன் தனது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முற்படும்போது அவனுக்கு எண் சோதிடமே கை தூக்கி விடுகின்றது. கைரேகை சோதிடம், எண்கணித சோதிடம் என்ற மூன்றையும் ஒருவர், பொறுமையுடன் ஆராய்ந்தால் இவற்றுக்கிடையே பிரிக்க முடியாத ஒற்றுமைகள் இருப்பதைகாணலாம். இந்த மூன்று சோதிடக்கலைகளும் கிரகங்களின் அடிப்படையிலேயே இறந்த, நிகழ் கால, எதிர்கால நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறுகின்றன. கைரேகையில் மேடுகளின் உயர்ச்சி தாழ்வும் சோதிடத்தில் கிரகங்களின் ஆதிபத்தியமும் கோசரபலனும் எண்கணித விஞ்ஞான சோதிடத்தில் எண்களின் வலிமையையும் அதாவது பிறந்த திகதிஎண், விதிஎண், பெயர் எண்களுக்கேற்ப எப்படி ஒரு மனிதனின் ஜீவியம் அமையும் என்பதை அப்படியே காட்டுகின்றது.

சோதிடத்தை எள்ளிநகையாடும் அறிவில்லாத கூட்டம் எங்கும் என்றும் இருந்து வருகின்றனர். விதி வழி வாழ்க்கையெனின் சோதிடமூலம் அந்த விதியின் பலம் பலம் குறைந்த தன்மையை உலகில் சோதிடன் ஒருவனே கணித்துக்கூற முடியும். டக்டர் நாடிமூலம நோயை மட்டுமே அறிய சோதிடன் ஜாதகக்குறிப்பு கைரேகை எண் சோதிடமூலம் ஒருவரின் ஆயுள், புத்திரபாக்கியம, சகோதர அமைப்பு தொழில், விவாகம் இப்படி மனிதவாழ்வுடன் தொடர்புடைய அத்தனை அம்சங்களையும் எடுத்தியம்ப முடியும். சோதிட, கைரேகை, எண்கலை என்பன பரந்த சமுத்திரத்தை விட ஆழமானவை, பரப்பில் கூடியவை.

சோதிடத்தை நம்பாத உலகின் எந்த மத இனத்தவரும் மனிதவாழ்வுடன் எண்கள் கொண்ட தொடர்பினைக்கண்டு ஆச்சரியமும் வியப்பும் கொள்கின்றனர். ஒருவரின் பிறந்த திகதி மட்டும் சரியாக அறிந்து கொண்டால் அவரின் பல்வேறு வாழ்க்கை அம்சங்களையும் கூறிவிட முடியும். சோதிடமேதையான கவுண்ட்லூயி ஹைமன், -என்ற கீரோ எண்கள் புரியும் வியத்தகு ஆற்றல்களை உலகிற்கு காட்டினர். தமிழ் மொழியில் பண்டிட் ஸேதுராமன் அவர்களின் அதிர்ஷ்ட விஞ்ஞானம் அல்லது நீங்களும் அதிர்ஷ்டசாலிகளாகலாம் என்ற எண் சோதிட நூலை இன்று போற்றிப்பாராட்டாதவர்கள் கிடையாது.

ஒருவரின் பிறந்த திகதி, மாதம், ஆண்டு பிறந்த நேரம், இவைகளைக் கொண்டு சரியாகக் கணிக்கப்பட்ட ராசிச்சக்கரத்தில் இடம் பெறும் கிரகநிலைகளை இனிப்படைத்தவனே வந்தாலும் மாற்ற முடியாது. கைரேகைகள் கிரகமாற்றத்திற்கு ஏற்ப புதிதாக தோன்றுவன தோன்றிய ரேகைகள் அழிவுறுகின்றன. மேடுகள் உயர்கின்றன தாழ்கின்றன. எனவே கைரேகை, மேடுகளின் உற்பத்தி அழிவுக்கேற்ப மனிதரின் செயல்கள் நடவடிக்கைகள் மாறுகின்றன. பாதிப் படைகின்றன. சோதிடத்தில் ஒருவர் பிறக்கும் பொழுது எங்கெங்கு கிரகங்கள் நின்றனவோ அவற்றின் நட்பு, நீச, உச்ச நிலைமைகளுக்கேற்பவும், கிரகசேர்க்கை, மற்றும் கோசரபலன் என்பவற்றினாலும் மனிதவாழ்வு உயர்ந்தும் தாழ்ந்தும் விடுகின்றன.

எண்சோதிடமூலம் ஒருவரின் இயல்பான பெயரினை அதிர்ஷ்ட எண்களுக்கு மாற்றி அதிர்ஷ்டசாலியாக வரமுடியும் என்ற மாபெரும் உண்மை இருப்பதை இன்றைய மனிதகுலம் உணர்ந்து பிறந்த எண் விதி எண்களுக்கேற்ப தமது பெயரினை, கையெழுத்தினை ஒருசிறிது மாற்றியமைத்து வெற்றி வீரராக வரவிருப்புகின்றனர். எண்களும் எழுத்துக்களும் இருகண்கள், இருகண்களும் சரியான முறையில் செயற்பட்டால்த்தான் பார்வை நன்றாகும். இப்படித்தான் எண்கலையும். எந்த எண்கள் நமக்குப் பொருந்துகின்றன என்பதை முதன் முதலில் நாம் அனுபவ ஆராய்ச்சிமூலமூலம் கண்டறிய முடியும், அல்லது எண்சோதிடத்தில் ஈபடுாடு கொண்ட ஒருவரின் மூலமும் அறிந்து கொள்ளமுடியும்.

எண் சோதிடக்கலைமூலம் ஒருவர் தனது பெயரை அதிர்ஷ்ட எண்களுக்கு மாற்றம் செய்தால் அதிர்ஷ்டசாலியாக வரமுடியுமா..? ஒருவருக்கு 7½ ச்சனி, அட்டமத்துச்சனி, அட்டமத்து வியாழன் ராகு கேதுக்கள் சந்திரகோச்சரபலனில் தீய விளைவுகளை ஏற்படுத்தும் காலத்தில் அதிர்ஷ்ட எண்களில் அமைக்கப்பட்ட பெயரினால் அவருக்கு நற்பலன் விளையுமா அல்லது அவரை அதிர்ஷ்டப் பெயரெண் காப்பாற்றுமா.? ஒருவருக்கு நடக்கப்போகும் விபத்துக்கள். துர் அதிர்ஷ்டங்கள், ஏன் மரணத்தைக்கூட் நிகழ விடாமல் அதிர்ஷ்ட எண்கள் தடுக்கலாமே? இப்படியெல்லாம் அபிப்பிராய பேதங்களும் வாதப் பிரதிவாதங்களும் எண் சோதிடம் பற்றிகண்டனங்களும் ஏற்படுத்தப்படுகின்றன.

எண்சோதிடமூலம் அதிர்ஷ்ட எண்களில் பெயர் அமைப்பது ..உளவியல் நம்பிக்கை, அதாவது எனது பெயர்அதிர்ஷ்ட எண்களில் உண்டு எனவே நாளாந்தம் என் வாழ்க்கை எல்லா வழிகளிலும் முன்னேறி வருகின்றது பழுத்தமரமே கல் எறியை வரவேற்கும் எண் சோதிடம் பற்றி எவ்வளவுக் கெவ்வளவு கண்டனங்களும், குறை, நிறைகளும் வாதப்பிரதி வாதங்களும் நடாத்தப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு இந்த எண்கலை மென்மேலும் சுடர் விட்டுப்பிரகாசித்த வண்ணம் இருக்கும்.

ஒருவரின் பெயரை எப்படி அதிர்ஷ்ட எண்களில் அமைப்பது ..சிவராசாவின் அதிர்ஷ்டப் பெயரெண் அட்டவணை, இதற்கு வழிகாட்டுகின்றது.

உங்கள் பிறந்த திகதி எண் விதி (திகதி மாதம் ஆண்டு என்பன வற்றைக் கூட்டி வரும் தனிஎண் விதி எண்ணாகும்)களுக்கேற்ப பெயரெண் அதிஷ்ட எண்களில் அமைந்து விட்டால் நீங்களும் அதிஷ்டசாலிகளாகலாம். (சுருக்கம் திகதி எண் - தி, விதி எண் - வி, பெயரெண் - பெ.)

| 1. சூரிய. | | | 2. சந். | | | 3. குரு | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தி. | வி. | பெ. | தி. | வி. | பெ. | தி. | வி. | பெ. |
| 1 | 1 | 5 | 2 | 1 | 5 | 3 | 1 | 1 |
| 1 | 2 | 5 | 2 | 2 | 1 | 3 | 2 | 1 |
| 1 | 3 | 1 | 2 | 3 | 1 | 3 | 3 | 1 |
| 1 | 4 | 1 | 2 | 4 | 1 | 3 | 4 | 1 |
| 1 | 5 | 1 | 2 | 5 | 1 | 3 | 5 | 1 |
| 1 | 6 | 6 | 2 | 6 | 1 | 3 | 6 | 1 |
| 1 | 7 | 1 | 2 | 7 | 1 | 3 | 7 | 1 |
| 1 | 8 | 5 | 2 | 8 | 5 | 3 | 8 | 5 |
| 1 | 9 | 6 | 2 | 9 | 6 | 3 | 9 | 6 |

தொடர்ச்சி கடைசிப்பக்கஅட்டையின் உட்பக்கம்

# ரௌத்திரிவருடம் வைகாசிமாதம்

## இலங்கைக்குப் பலன்.

இம்மாதம் காய், கறி, மீன், இரும்பு, புகையிலை, எள், நெல், என்பன எதிர்பார்த்தபடி விலையேறுது, வானம் இடையிடையே மப்பாகவும், தூற்றலாகவும் இருக்கும். உஷ்னரோகங்களினால் மக்கள் கஷ்டப்படுவர். தெய்வவிழாக்கள் அதிகம் நடைபெறும், வாத்தியக்கார சங்கீத விற்பன்னர்கள் அதிக நன்மைபெறுவார். மங்கலகாரியங்கள் எங்கணும் நடைபெறும். காற்று மந்தமாக இருக்கும்.

மத்தியகிழக்கு நெருக்கடி உச்சக்கட்டத்தை அடையும். அதனால் எரிபொருட் கஷ்டம் மேலும் அதிகரிக்கும், விறகு வைக்கோல் என்பன சம விலையாயிருக்கும். பழவகைகள் சிறிது விலை குறையும், பிரதான உலகத்தலைவர்கள் சிலர் இலங்கைக்கு வந்து விசேட தீர்மானம் எடுப்பார்கள். தண்ணீர்க் குறைவு நீங்கும். இலங்கையின் அந்நிய செலவாணி அதிகரிக்கும். கால்நடை கஷ்டமுறும், தரணிகள் நன்மைபெறுவர்கள். நாவிதர் சலவைத் தொழிலாளர்கள் தொழிற்குறைவுறுவர். அரசாங்க உத்தியோகத்தர் கஷ்டமுறுவர்.

**கோசர பலன் :**

## பன்னிரு இராசிகளும் அவற்றின் பலன்களும்




இடையிடையே எதிர்காலத்தில் யாது நிகழுமோ என்ற கவலை, அதனால் மன அலைவு, தனது நிலையிலிருந்து பெலம் குன்றுதல், நண்பர்களிடையே ஒருசில விளங்கா விளக்கத்தினால் வாக்குக் கலகம், முன்னிருந்ததிலும் பொருள்வரவு அதிகரித்தல், எடுத்த காரியங்கள் வெற்றி, இடைவிடாத முயற்சி, தனக்கு முன்னிருந்ததிலும் சில அதிகாரங்களைப் பெறுதல், மன மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெறுதல், இலட்சுமீகரம் சுகம் உண்டாம். இவர்களுக்கு 8-ம் 12-ம் 15-ம் நாள்கள் விசேடபலனுக்குரியன. இந்நாள்களில் இவர்கள் விவாகம், பூமி, வியர்பாரம், தொழில் தேடுதல் என்பன சம்பந்தமான விடயங்களைச் செய்யச் சிறந்த பலனுண்டாகும். இவர்களுக்கு 13-ம் தேதி விசேட பலனுக்குரியதல்ல. அன்று பொதுவாக வெளிப் பிரயாணத்தை நிறுத்துதல் நன்று.




அற்ப சுகவீனம், அதனால் உடலிற் சோர்வு, தொழிலில் ஊக்கக் குறைவு, இனசனத்தவரிடையே பிரதான சில காரியங்கள் குறித்து அபிப்பிராயபேதம், காய்ச்சல், உஷ்ணம், பெரியோர் சகாயம், தான் செய்யாத சில விடயங்களுக்காகப் பழி கேட்டல், இனசனக் கொண்டாட்டம், தெய்வ வழிபாடு, நற்


புத்திமதி, தூர தேசபந்து ஒருவரின் சகாயம் நல்லெண்ணம், பெண்ணுகில் கணவனுக்கும் ஆணுகில் பெண்ணுக்கும் விசேட பலனுண்டாம். இவர்களுக்கு 7-ம் 11-ம் 15-ம் நாட்கள் விசேட பலனுக்குரியன. இக்காலங்களில் பிரயாணம், தெரிவு, விவாகம், அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்தல், என்பனவற்றைச் செய்ய விசேட பலனுண்டு. இவர்களுக்கு 12-ம் தேதி விசேட பலனுக்குரியதன்று. அன்று கொடுக்கல், வாங்கல், அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்தல், புதிய வியாபாரத்தை ஆரம்பித்தல், என்பனவற்றை விலக்குதல் நல்லது




எடுத்த காரியங்கள் நினைத்தவாறு நிறைவேருமை, அதனுல் ஏமாற்றம், பொருள்வரவு, 12-ம் தேதிக்கு மேல் முயற்சித்த காரியங்கள் பலித்தல், தொழிலில் உற்சாகம், தெய்வ வழிபாடு, தேகசுகக்குறைவு, வாயு பீடை, அதிக பயன் வருமென்று எண்ணிச் செய்த காரியமொன்றில் நினைத்தவாறு பலன் கிட்டாமை, தெய்வானுகூலத்தினுல் எதிரிகளின் பிரசாரம் நிறைவேருமை, இன்பமயமான காரியங்களில் பொழுது போக்கு, லாபம், தொழிலில் உற்சாகம் சில எதிர்பாராத பொருள்வரவு என்பன உண்டாம். இவர்களுக்கு 6-ம் 10-ம் 14-ம் நாள்கள் விசேட பலனுக்குரியன. இந்நாள்களில் பிரயபணம், அரசாங்க தொழில் தேடுதல், தொழில் விண்ணப்பம் செய்தல், விவாகம், பூமி என்பன சம்பந்தமான விடயங்களைச் செய்ய விசேட பலனுண்டாகும். இவர்களுக்கு 11-ம் தேதி விசேடபலனுக்குரியதன்று. அன்று பொதுவாகத் தூரப்பிரயாணம் செய்வதைத் தவிர்த்தல் நன்று.




நன்மை விருத்தி, அரசாங்க அதிகாரிகளினுல் உதவி தான் செய்யாத சில விடயங்களுக்காக வீண்பழிகேட்டல், வீண்செலவு, இடையிடையே அற்பசுகவீனம், சூட்டினுற் பீடிக்கப்படுதல், சந்தோஷம், உல்லாசமான பொழுதுபோக்குக்களில் ஈடுபடுதல், பணவரவு, 12-ம் தேதிக்குமேல் உடம்பில் சோர்வு, அசௌகரியம் நீங்கிப் புதிய உற்சாகம் ஏற்படுதல், சுகலாபம் சங்கீதம் நாடகம் போன்றவற்றில் காலத்தைச் செலவழித்தல், வீண்செலவு, பொருள்வரவுக்குரிய புதிய தொடர்புகள் உண்டாதல், என்பன உண்டாகும். 5-ம் 9-ம் 13-ம் நாள்கள் விசேட பலனுக்குரியவை. இக்காலங்களில் விவாகம், தொழில் தேடுதல், பிரயாணம், வழக்கு என்பன சம்பந்தமான விடயங்களைச் செய்ய விசேட பலனுண்டாகும். இவர்களுக்கு 10-ம் தேதி விசேட பலனுக்குரியதன்று. அன்று நேர்முகத்தில் விசேட சம்பவங்களுக்காகச் சந்தித்தல், பிரயாணம் என்பனவற்றை விலக்குதல் நன்று.




எடுத்த காரியங்களில் வெற்றி இடமாற்றம், அதனுல் சில அசௌகரியங்கள், சுகபோகம், இன்பமான பொழுதுபோக்குகளில் ஈடுபடுதல், இனசனத்வர்களிடையே, பிழையானவிளக்கத்தால் வாக்குக்கலகம், தான் செய்யாத சில விடயங்களுக்காக வீண் பழிகேட்டல், 12-ம் தேதியின்மேல் இவை நீங்கி நற்பல

னுண்டாதல்; உணவுச்சுகம், விருந்துகளிற் பங்குபற்றுதல் நிலை பிரிவு இடையிடையே யே மார்புச்சளி முதலியவற்ருல் பீடிக்கப்படுதல் என்பன உண்டாகும். இவர்களுக்கு 4-ம் 8-ம் 12-ம் நாட்கள் விசேட பலனுக்குரியவை இந்நாள்களில் வியாபாரம். வழக்கு நேர் முகப் பரீச்சை விவர்கம் முதலியன சம்பந்தமான விடயங்களைச் செய்ய விசேட பலனு ண்டாகும், 9-ம் தேதி விசேட பலனுக்குரியதன்று. அன்று பொதுவாக வெளிப் பிரயா ணங்களைத் தவிர்த்தல் நன்று.



## கன்னி

**உத்தரம் 2, 3, 4-ம் கால்கள், அத்தம், சித்திரை 1, 2-ம் கால்கள்**

இடமாற்றம், அதனுல் முன்னிருந்த சில சலுகைகள் இல்லாமற் போதல்இடையிடையேஅற்ப சுக வீனம்அதனுல் பணச் செலவு உற்சாகக்குறைவு எதிபாராத சிலசம் பவங்கள் நடைபெறுதல், பிரயாணம் மனதுக்குக் கஷ்டமான சில சம்பவங்கள் நடைபெறுல் தான் செய்யாத சில விடயங்களுக்காக வீண் பழி கேட்டல் வீண்செலவு நிலை கேடு தெய்வானுகூலம், பெரியோர் சகாயம் இடையாருத முயற்சி என்பன உண்டாம். இவர்களுக்கு 3-ம் 7-ம் 11-ம் நாள்கள் விசேடபலனுக்குரியன. இக்காலங்களில் இவர்கள் வியாபாரம், விவாகம் நேர்முகப் பரீச்சை பூமி, வழக்கு, கொடுக்கல் வாங் கல் என்பன சம்பந்தமான விடயங்களைச் செய்ய விசேட பலனுண்டாகும். 8-ம் தேதி விசேட பலனுக்குரியதன்று. அன்று பொதுவாக பிரயாணம், வியாபாரம் நேர்முகத்தில் பிரதான அதிகாரிகளைச் சந்தித்தல் என்பனவற்றைத் தவிர்க்கவும்.



## துலாம்

**சித்திரை 3, 4-ம் கால்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் கால்கள்**

துன்பமான சில சம்பவங்கள் நிகழுதல் இடையிடையே உடல் நலம் நன்ருய் இராமை, கால் கை உளைவு. லாபம் 12-ம் தேதிக்குமேல் உடற் சுகம், கஷ்டத்துக்கேதுவான சூழ் நிலைகள் மாறுதல் புத்தி விருத்தி, மாணவர்களாயின் கல்வியில் விசேட தேர்ச்சி தனலாபம், சுகம், பொருள் வரவு, தரும காரியங்களிற் செலவு செய்தல், தெய்வ வழிபாடு, பெரியோர் புத்திமதியினுல் நடைபெறவிருந்த சில கஷ்டங்கள் நீங்குதல்; இடையிடையே எதிர்பார்த்ததிலும், அதிகசெலவுண்டாதல் என்பன உண்டாம். இவர்களுக்கு 2-ம் 6-ம் 10-ம் தேதிகள் விசேட பலனுக்குரியவை. இக்காலங்கழில் விவாகம் பொருள்தேடுதல், நேர்முகப்பரீட்சை பிரயாணம், பூமி, அதிகாரிகளைச் சந்தித்தல் சம்மந்தமான விடயங்களைச் செய்ய விசேட பலனுண்டாகும். இவர்களுக்கு 7-ம்தேதி விசேட பலனுக்குரியதன்று. அன்று பொதுவாக முக்கிய காரியங்களை ஒத்திப்போடுதல் நன்று.



## விருச்சிகம்

**விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை**

எதிர்காலம் யாது நிகழுமோ என்ற கஷ்டம், தான் செய்யாத சில விடயங்களுக்காக வீண்டழி கேட்டல், அபகீர்த்தி செலவு, இடையிடையே மனதுக்குத் துன்பமான சில சம்பவங்கள் நடைபெறுதல் வாக்குக்கலகம், கஷ்டம், பிரியம் ஆண்களாயின் மனைவிக்கும், பெண்ணுகில் ஆணுக்கும் விசேட நன்மையுண்டாம். எதிர்பாராத சில செலவுகள் ஏற்படுதல் என்பன உண்டாம். இவர்களுக்கு 1-ம் 5-ம் 9-ம் தேதிகள் விசேட பலனுக்குரியவை. இத்தேதிகளில் இவர்கள் விவாகம், தொழில்

தேடுதல் கொடுக்கல் வாங்கல் வழக்கு, புதுவியாபாரத்தில் முதலிடல் என்பன செய்ய விசேட பலனுண்டாகும். இவர்களுக்கு 6-ம்தேதி விசேடபலனுக்குரியதன்று. அன்று பொதுவாக பிரயாணம், அதிகாரிகளை நேர்முகத்தில் சந்தித்தல் என்பனவற்றை விலக்குதல் நன்று.



## தனு

**மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்**

இதிற் பிறந்தவர்களுக்கு இடையிடையே வாயு பீடை வயிற்றில் வாயு பணச்செலவு எடுத்த காரியங்கள் தடையின்றி நிறைவேறுதல், தனதுநிலையிலிருந்து சிறிதே தளர்தல் பெண்களாற் கஷ்டம், எதிர்பாராத இடத்திலிருந்து பண உதவிபெறுதல் இடையாருத யோசனை நணபகர்ளாற் சகாயம், மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுதவ், உல்லாசப் பொழுதுபோக்கு மங்கல காரியங்களில் பங்குபெறல் சென்றவிடங்களில் கௌரவம் வியாபாரிகளாயின் புதிய முதலீடுகளினால் லாபம், மனைவியினால் கணவனுக்கும் கணவனால் மனைவிக்கும் நன்மையுண்டாதல் என்பன உண்டாம். இவர்களுக்கு 22-ம் 26-ம் 28-ம் தேதிகள் விசேட பலனுக்குரியன. இக்காலங்களில் இவர்கள் விவாகம் விவசாயம் கொள்வனவு, தொழில் தேடுதல், அந்நியதேசப் பிரயாணம் என்பவற்றை மேற்கொள்ள விசேடபலனுண்டாகும். இவர்களுக்கு 24-ம் தேதி நற்பலனுக்குரியதன்று. அன்று பொதுவாகப் பிரயாணம் செய்வதை தவிர்க்குக.



## மகரம்

**உத்தராடம் 2, 3, 4-ம் கால்கள், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் கால்கள்**

இவர்களுக்கு எடுத்தகாரியங்களில் வெற்றி உடல் நலம், முன்னிருந்ததிலும் தேறுதல், கடன் படல், பெரியோர்தரிசனம் வீட்டில் நற்காரியங்கள் நிகழுதல் விருந்துபசாரம், கடன்படல்தூர தேசப்பந்து ஒருவரால் நன்மை இடையாருமுயற்சி, தனதானிய லாபம், தெய்வானுகூலம், நற்புத்தியினால் கஷ்டமொன்று நீங்குதல், இடமாறுதல் அதனால் நன்மை பிழையானவார்த்தையினால் நெருங்கிய அன்புள்ளவரோடு மனமாற்றம் சுறுசுறுப்பு, என்பன உண்டாம். இவர்களுக்கு 21-ம் 25-ம் 27-ம் தேதிகள் விசேட பலனுக்குரியனவாம். இக்காலங்களில் நெடும்பிரயாணம், விவசாயம் வழக்கு, பணம் சம்பந்தமான விடயங்களைச் செய்ய விசேட பலன் உண்டாகும். இவர்களுக்கு 23,ம் தேதி விசேட பலனுக்குரியதன்று. அன்று பொதுவாக விவாகம் பணம் நேர்முகப் பரீட்சை சம்பந்தமானவற்றைத் தவிர்த்தல் நன்று.



## கும்பம்

**அவிட்டம் 3, 4-ம் கால்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3-கால்கள்**

இவர்களுக்கு இடையிடையே மலச்சிக்கல், உஷ்ணம் என்பனவற்றால் பாதிக்கப்படுதல், தனதானியலாபம். இடையாருமுயற்சி, முற்கோபம் கொள்ளுதல் தனதுநிலையிலிருந்து சிறிது முன்னேறுதல் தெய்வவழிபாடு, கஷ்டத்திலும் மனநிறைவு, மங்கல காரியங்களிற் பங்கெடுத்தல், கௌரவம் பெறுதல் இனசனக் கொண்டாட்டம், நண்பர்களிடையே வாக்குவாதம், இயந்திரத்தால் நஷ்டம், வியாபாரத்தில் நல்ல லாபம், புதிய முதலீடுசெய்தல், மாணகர்களுக்கு தேர்வில் நற்சித்தி போசனசுகம் பெரியோரொருவரின் புத்திமதியால் வரவேண்டிய நஷ்டம் விலகுதல்,

என்பன உண்டாம். இவர்களுக்கு 20-ம், 24-ம், 26ம் தேதிகள் விசேடபலனுக்குரியன. இக்காலங்களில் இவர்கள் விவாகம் பணம் தானியம், பிரயாணம், நேர்முகப்பரீட்சை புதுக்கட்டிடம் நிறுவுதல் என்பன சம்பந்தமான விடயங்களைச் செய்ய விசேட பல னுண்டாகும். 22-ம் தேதி பொதுவாக இவர்களுக்கு நற்பலனுக்குரியதன்று. அன்று முக் கிய விடயங்களைத் தவிர்க்கவும்.



## மீனம்

**பூரட்டாதி 4-ம் கால், உத்தராட்டாதி, ரேவதி**

இவர்களுக்கு மங்கல காரியங் களிற் பங்குகொடுக்கும்வாய்ப்பு. செய்யும் தொழில்முன்னேற்றம், சில கஷ்டமான காரியங்கள் தெய்வ வழிபாட்டினுல் நிறை வேறுதல், இனசனங்களிடையே பிழையான விளக்கம், கணவ னுயின் மனைவிக்கும் மனைவியா யின் கணவனுக்கும் விசேடபல னுண்டாதல், பிரயாணக்கஷ்டம் வீண்செலவு, பூமிப்பலிதம், நண்பர்களாற் சகாயம். நீரினுல் நன்மை, யந்திர முடக் கம், பரீட்சையில் எதிர்பார்த்தபடி மனத்திருப்தியின்மை என்பன உண்டாம். இவர்க ளுக்கு 19-ம் 23-ம் 25-ம் தேதிகள் விசேட பலனுக்குரியன. அக்காலங்களில் பணம், வழக்கு, வியாபாரம், பிரயாணம் விவாகம்என்பன. சம்பந்தமான விடயங்களைச் செய்ய விசேட பலனுண்டாகும். இவர்களுக்கு 21-ம் தேதி விசேட பலனுக்குரியதன்று. அன்று பொதுவானமங்கல கருமங்களை விலக்குதல் நன்று.

தேவர்களுக்கு இமையார் என்று ஒரு பெயர் உண்டு. அவர்கள் இமைப்பதில்லையாம். எப்பொழுதும் விழித்துக்கொண்டேயிருப்பார்கள். இமைக்காத இமையை உடையவர்கள் இப்படி இமையிலே சிறப்புடை யவர்களாதலின் இமையவர் என்ற பெயர் வந்தது. கோவை நூல்களில் ஓர் இளைஞன் ஓர் அழகியபெண்ணைக்கண்டு காதல் கொள்ளும் செய்தி கள் வருகின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு துறையாக இருக் கும். முதலில் அந்தப்பெண்ணைக் காணும்போது, "இவள் தேவமகளோ? நீரரமகளோ? மானிடமகளோ? என்று ஐயுறுவான். பின்பு சில கார ணங்களால் அவள் மானிடமகளே என்று துணிவான். கண் இமைப்பதும் கால் நிலத்திலே படிவதும், அவள் உலகத்தில் இயற்றிய ஆபரணங் களை அணிந்திருப்பதும் அவள் அணிந்திருக்கும் மாலை வாடுவதும் ஆகிய அடையாளங்களைகொண்டே அவளை மானிடமகள் என்று தெளிவான். தேவமகளாக இருந்தால் இவை இரா. கண் இமைக்காது. அங்கே தேவர்களின் இயல்பாகிய கண் இமையாமையைப் புலவர்கள் எடுத்துச் சொல்வார்கள்.

திருமாலுக்கு வாகனமாகிய கருடனுக்கு இமையிலி என்று பெயர். கருடன் தேவசாதியைச் சேர்ந்தவர் அல்ல. அவருக்கு இமைக்கும் இயல்பு உண்டு. ஆனுலும் அவரை இமையிலி என்று இலக்கியம் கூறு கிறது. எப்போதும் திருமாலின் கைங்கரியத்தில் கண்ணுகச் சிறிதும் சோர்வின்றி துயிலின்றி இருப்பதனுல் இமை இருந்தும் அதைப் பயன் படுத்தாமல் இமை இல்லாதவரைப்போல் அவர் இருக்கிறுர். அதனுல் அந்தப்பெயர் வந்திருக்கலாம் என்று சிலர் காரணம் கூறுகிறுர்கள்.

# ராகு—கேது மாற்றம்

ரௌத்திரி வருடம் வைகாசி மாதம் 4ந் திகதி (17—5—1980) சனிக்கிழமை பிற்பகல் நாடி 27 விநாடி 11 (மணி 4 நிமிடம் 45)ல் இராகு தன் பகை வீடாகிய சிங்கத்தை விட்டு தன்பகை வீடாகிய கற்கடகராசியிலும் கேது தன்பகை வீடாகிய கும்பராசியை விட்டு தன் நட்பு வீடாகிய மகரத்திலும் பிரவேசிக்கின்றார்கள், சர்வார்த்த சிந்தாமணியென்னும் சோதிட நூலில் ராகுவுக்கு கடகம் மூலக்கோணராசியென்றும், ஆட்சிவீடென்றும், கேதுவுக்கு மகரம் மூலக்கோணராசியென்றும், ஆட்சிவீடென்றும், கூறப்பட்டிருக்கின்றது. இவர்கள் இவ்விராசிகளிலே இருக்கும்பொழுது உலகத்தின் பல பாகங்களிலும் அரசியற்குழப்படிகளும், நல்லோர் மறைதலும், பிராமணர் வைசியர்களுக்குப் பீடைகளும், சமயநெறி குன்றுதலும், இளம்சமுதாயத்தரின் விரக்தி நிலையும், பொருட்களின் விலையேற்றமும், சோழ, ஆரிய தேசங்களில் மழைக்குறைவும், சிற்சில இடங்களிலே வெள்ளம், புயற்சேதமும், பஞ்சமும் தொற்றுநோய்கள் பல்கிப்பெருகுதலும், அரசியலில் ஸ்திரமற்ற நிலைமைகளும், சிற்சில இடங்களில் பூமிநடுக்கமுண்டாம். இனி ஒவ்வொரு சந்திர ராசிகளிலும் பிறந்தோருக்கு இவர்கள் தரும் பலனைக் கோசரரீதியாக ஆராய்வோம்.

மேடம்: 4-ல் இராகு இருப்பதால் மக்களிடையே விரோதமும், சுரம் போன்ற ரோகங்களும், தனித்த நிலையும், தொழில் இடங்களில் பலவித உபத்திரவங்களும், விஷ செந்துக்களாற் பயமும், 10-ல் கேது இருப்பதால் காரியங்களிலே பங்கமடைதலும், செலவு மிகுதிகளும், சபையிலே அபகீர்த்தியடைதலும். உண்டாம்.

இடபம்: இராகு 3-ல் இருப்பதினாலே வருகின்ற லாபமும், தொழில் விருத்தியும், கருமங்களில் ஜயமும், நல்லோர் ஆதரவும், பூமி விருத்தியும், புதிய மனை கட்டுதலும் வியாச்சியம் போன்றவற்றில் வெற்றியும் 9-ல் கேது இருப்பதினாலே இடையிடையே மனக்கிலேசமான சம்பவங்கள் நடைபெறுதலும், நெருங்கிய பந்துக்களின் மறைவும், இடையிடையே பொருட்கள் அழிதலும், அல்லது கள்வரினாலே களவாடப்படுதலும் என்பன உண்டாம்.

மிதுனம்: 2-ல் இராகுவும் 8-ல் கேதுவுமிருப்பதினாலே ஆரோக்கியம் குன்றுதலும், விஷம் போன்றவற்றினாலே, பயமும், அவமிருத்துத்து பயமும் நன்மை செய்தும் கெட்ட பெயர் வாங்குதலும் இரணம் போன்ற சிகிச்சைகளும், மாரகத்துக்கு ஒப்பான நிலைகளும், சிலருக்கு மாரகநிலையும், வழக்குபோன்றவற்றினாலே பயமும் உண்டாம்.

கடகம்: 1-ல் ராகுவும் 7-ல் கேதுவும் இருப்பதினாலே தாங்கள் முன்பு இருந்த நிலையிலும் பார்க்க கீழ்நிலையடைதலும், சுரம் போன்ற ரோகங்களினாலே பயமும், விஷசெந்துக்களினாலும், விஷவஸ்துக்களினாலும், பயமும், ஆரோக்கியம் குன்றுதலும், செலவுகள் மிகுதிகளும், செய்தொழில் பலித

மின்மையும், நிலைமாற்றங்களும் உண்டாம்.

**சிங்கம்** : 12-ல் ராகுவும் 6-ல் கேதுவும் இருப்பதினுலே ஆரோக்கியம் குன்றுதலும், சத்திரசிகிச்சை போன்ற உபத்திரவங்களும், வீண் பிரச்சினைகளும் தன்மனம் போன்ற வழியே நடத்தலும், பொருள் வரவு அதிகரித்தலும், தொழில்விருத்திகளும், புண்ணிய கருமங்களிலே பற்று மிகுதலும், நல்லோர் ஆதரவுகளும் உண்டாம்.

**கன்னி** : 11-ல் இராகுவும், 5-ல் கேதுவும் இருப்பதினுலே பொருட்களினுலே இலாபமடைதலும், எதிர்பாராத பொருள் வருவாய்களும், நல்லோர் ஆதரவும், எடுத்தகருமங்களிலே வெற்றியும், உல்லாசப்பயணங்களும், கள்வர்மூலம் லாபமடைதலும், இதனுலே அவமானப்படுதலும், மனயோசனை மிகுதிகளும் உண்டாம்.

**துலாம்** : 10-ல் இராகுவும், 4-ல் கேதுவும் இருப்பதினுல் வரவின் மிஞ்சிய செலவுகளும் அபகீர்த்தியடைதலும், விரோதங்களும், வாய்வு கிரந்திபோன்ற ரோகங்களும் இதனுலே ஆரோக்கியம் பாதித்தலும் அவமிருத்து பயங்களும், மனயோசனை மிகுதிகளும் உண்டாம்.

**விருச்சிகம்** : 9-ல் இராகுவும் 3-ல் கேதுவுமிருப்பதினுலே எடுத்தகருமங்கள் தடைப்படுதல், பொருட்கள் கைவிட்டுப்போதலும், வரவின்மிஞ்சிய செலவுகளும், வியாச்சியங்களில் தோல்வியும், இதனுலே மானபங்கப்படுதலும், மிருத்துபயமும், இடையிடையே பிரயாணம், அற்பபொருள் வரவு, கொடுக்கல் வாங்கற்பேறு என்பனஉண்டாம்.

**தனு** : 8-ல் இராகுவும் 2-ல் கேதுவுமிருப்பதினுலே பொருட்கள் அழிதலும், கள்வரினுலே பொருட்கள் அபகரிக்கப்படுதலும், தன்கெட்ட செயல்மூலம் அவமான நிலையையடைதலும், சொறி, கரப்பன் போன்ற ரோகங்களும், பந்துக்களின் விரோதமும், சுரம், சத்திரசிகிச்சை போன்ற உபத்திரவங்களும் உண்டாம்.

**மகரம்** : 7-ல் இராகுவும் 1-ல் கேதுவுமிருப்பதினுலே தான்முன்பு இருந்த நிலையிலும் பார்க்க வீழ்ச்சியடைந்தும், சுரம், அக்கினி, ஆயுதம் விஷம் என்பவற்றினுலே பயமும், சிலருக்கு ரோகநீக்கமும், கருமங்களிலே தடைகள் ஏற்படுதல். கொடுக்கல் வாங்கற் பிரச்சினைகள், அவமிருத்துபயமும், மனயோசனைகளும் உண்டாம்.

**கும்பம்** : 6-ல் இராகுவும், 12-ல் கேதுவுமிருப்பதினுலே ஆரோக்கியமும் பாதித்தலும், துக்ககரமான சம்பவங்கள் நடத்தல் மிருத்து போன்றவற்றினுலே பயம், தனித்த நிலை, இடையிடையே பொருட்கள் வரவு கள்வர் மூலமான லாபம், கொடுக்கல் வாங்கற்பேறு, தொழில் விருத்தி என்பன உண்டாம்.

**மீனம்** : 5-ல் ராகு இருப்பதினுலே பந்துக்களின் கலகமும், இதனுலே மனயோசனைகளும், பொருட்கள் நட்டம், சேதமடைதல், பகைமிகுதியும், ஆரோக்கியம் குன்றுதலும், உன்மத்தநிலையும், 11-ல் கேது இருப்பதால் தெய்வபக்தி மிகுதலும், தீர்த்தயாத்திரைகளும், புண்ணிய ஸ்தலயாத்திரைகளும், இடையிடையே அற்பபொருள் வரவும், கல்வியினுலே மேன்மையடைதலும் என்பன உண்டாம்.

# கேள்வி - பதில்

**கேள்வி : வாக்கிய பஞ்சாங்கத்திற்கும் திருக் கணித பஞ்சாங்கத்திற்கும் இந்த முறை வருடப்பிறப்பில் நேரவித்தியாசமேற்பட்டதேன்?**

பதில் : இந்த முறை மாத்திரம் தான் இந்த வித்தியாசம் ஏற்பட்டதென்று நீங்கள் பிழையாக விளங்கிக் கொண்டீர்கள். திருக்கணித பஞ்சாங்கத்தின் தொடக்கமே இந்துசமய வேதத்தில் கூறிய கணிதத்திற்கு முரணுகப் போவதுதான். இதனை திருக்கணித பஞ்சாங்க முகவுரையில் காணலாம். "பழைய வாக்கியங்களைத் திருத்தங்கள் இல்லாமல்ஊகித்துக்கணிப்பதால் ஏற்படும் கிரகநிலைகள் பிரத்தியட்சத்திற்குஒத்துவராமை கண்டு முற்கூறிய சிதம்பரநாத சாஸ்திரிகளின் மருகர் ஹே. கார்த்திகேய ஐயர் அவர்கள் பத்தாண்டுகளாகத் திருக் கணிதாப்பியாசஞ்செய்து 1888-89 சர்வதாரிவருடம் திருக்கணிதமுறையாகப் பஞ்சாங்கம் செய்தாரெனக் குறிக்கப்பட்டுள்ளது. அன்றியும் அதன்முன் பழையமுறைப்படியே இராமலிங்கமுனிவர் தொடக்கம் சிதம்பரநாத சாஸ்திரிகள்வரை, வாக்கிய முறைப்படி கணித்ததாகவும் மேற்பந்தியில் குறிப்பிட்டிருக்கிறர்.

எனவே 313 வருடங்களுக்கு முன்னரே இராமலிங்கமுனிவராலும் அவர் பின் வந்தோராலும் 313 வருடமாக கணிக்கப்பட்ட வாக்கிய கணித முறையை 1888-ம் ஆண்டுமுதன்முதலாக கார்த்திஹேயஐயர் திருத்தினர் என்பது அவர்களது முன்னுரையாலேயே பெற்றிருக்கின்றேம். பிரத்யட்சத்துக்கு ஒத்துவராதபடியால் திருத்தினேம் என்று திருத்தியமைக்குக் காரணமும் கூறுகிருர். திருத்துவதற்குமுன்பு கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கு மேலாக வாக்கிய முறைப்படியே பஞ்சாங்கம் கணித்ததுமாத்திரமன்றி விரதங்களும் சாதகங்களும் தெய்வ வழிபாடுகளும், ஏனைய சமயக்கிரியைகளும் வாக்கிய முறைப்படி அமைந்த கணிப்பின் அடிப்படையிலேயே கொண்டாடப்பட்டதே. இதனை அவரே ஒப்புக் கொள்கிருர்.

இந்தக் காலங்களில் வாழ்ந்த நாவலர் போன்ற பக்திமான்களும் சமயாசாரிகளும் சேர் பொன் இராமநாதர் போன்றஇந்து சமயத்தலைவர்களும், ஆலயம்கட்டுதல்பாடசாலைகள் அமைத்தல் விரதங் கொள்ளுதல்என்பனவற்றை வாக்கியமுறைப்படியே கைக்கொண்டு பெரும் பலன் பெற்றிருக்கிருர்கள். பொதுமக்களும் அவ்வாறே ஜாதகங்களை கணித்து எதிர்கால பலன்களைச் சரிவரக்கண்டிருக்கிருர்கள். யாவரும் வாக்கிய கணிதமே சமயஅனுட்டானத்துக்கும் ஜாதகங்களுக்கும் சரிஎனக்கொண்டார்கள். இவர் சொல்லும் இராமலிங்கர் தொடக்கம் சிதம்பரநாத சாஸ்திரிகளும் அவ்வாறே கொண்டார். இவர் பிரத்தியட்சத்துக்குச் சரிவரவில்லை என்று கணிதத்தை மாற்றும் பொழுது ஜாதகபலன் கூறிய நூல்களைத் திருத்தியமைக்கவில்லை.

வாக்கிய முறைப்படி கணித்த கணிதத்துக்கே சம்ஹிதைகளிலும் சம்ஸ்கிருத நூல்களிலும் தமிழ்சோதிட நூல்களிலும் பலன் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது வாக்கியகணித அடிப்படையிலேயே விரதம் முதலியனவும் தெய்வ வழிபாடும் வருடப்பிறப்புக் கருமமும் கூறப்பட்டுள்ளது. கணிதத்தைமேல் நாட்டவரின் முறைப்படி மாற்றினுல்அதற்கேற்றதாகச் சோதிட நூல்கள் எல்லாவற்றையும் மாற்றவேண்டாமா? இவ்வாறு கார்த்திஹேய ஐயர் மாற்றினுரா? கணிதத்தில் மாற்றம் செய்தால் வாக்கியமுறைப்படி பலன்கூறப்பட்ட சோதிட நூல்கள் எல்லாவற்றையும் ஏன் திருத்தவில்லை?

ஆகவே வாக்கியகணிதத்தைத் திருத்தி, அதன் அடிப்படையில் வந்த சோதிட நூல்களைத் திருத்தாமல் விடுவது முரண்பட்டதாகும்.

வாக்கிய கணிதமும், சோதிடநூல்களும் ஒன்றேடொன்று தழுவியவை, ஆதலினுல், வேதத்தின்படியும், சோதிட நூல்களின் பலன் வேண்டுமென்பவர்களும் வாக்கிய கணிதமுறையையே அனுட்டிக்கிருர்கள். இது வெளிப்படை.

தெய்வ வழிபாடு வருடப்பிறப்பு, விரதாதி, முதலியவை கூறுவதற்குத் திருக்கணித அடிப்படையில் சோதிடநூல்கள்இல்லை.

ஏனெனில்திருக்கணிதம் வராத காலத்தில் அவை செய்யப்பட்டன. வாக்கியபலனுக்கு சாத்திர ஆதாரமுண்டு, திருக்கணிதத் திற்கு அத்தகைய அடிப்படையில்லை.

மேலும், ஞானதிருட்டியால் முனிவர் தந்த கணிப்பை, கேவலம் ஒரு அற்ப மனி ஞல் மாற்ற நாம் அதை எற்றுக்கொள் ளுவோமா?

திருக்கணிதப்படி ஒருவருடம் 365-நாள் 15-நாடி 23-விநாடி கொண்டது. வாக்கிய கணிதப்படி ஒருவருடம் 365-நாள் 15-நாடி 31-விநாடி 15-தற்பரை கொண்டது. எனவே வருடப்பிரமாணத்தில் திருக்கணி தத்துக்கு8-நாடி 15-தற்பரைகுறைய ஒருவ ருடத்துக்கு 8-விநாடி 15-தற்பரை குறையு மாஞல் சிருஷ்டியாதி வருடம் முதல் கணித் தால், 1955885081 வருடங்களுக்கும் வருடக்கணக்கில் வருடப்பிறப்பு வித்தியா சமேற்படும், ஆகவே மணித்தியால கணக் கில் வித்தியாசம்வருவது விந்தையிலும்விந் தையே! ஆகவே திருக்கணிதப்படியும் ரௌத்திரி வருடப்பிறப்பு இந்த வருடம் நிகழாது இதனைப்பொதுமக்கள் நன்குஅறி வர். இதனுலேயே விளம்பரமூட்டினும் அவர்கள் நம்புவதற்குப்பின்னிற்கிருர்கள். எனவே வாக்கிய கணித முறைப்படியே வருடப்பிறப்புக் கொள்ளவேண்டும்.

**கேள்வி :** பிரத்தியட்சத்துக்குக் கிரகம் சரிவரும்படி கிரகசஞ்சாரங்களைத் திருக் திப் பலன் சொல்கிருர்களாம். இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** வானியல் கணிப்புகள் வேறு சோதிடக்கலை வேறு சோதிடக்கலை என் பது கிரகங்கள் சிலவற்றின் நிலைகள் எவ் வாறு மனிதனைத்தாக்கும் என்ற மனத்துக் கு அப்பாற்பட்ட ஞானத்தை அடிப்படை யாகக்கொண்டது. அது ஆழ்ந்த தியானத் தில் இருந்து முனிவர்களால் காணப்பட் டவை. இந்த அடிப்படையை இக்காலவிஞ் ஞானத்திஞல் விளக்கமுடியாது. பிரத்தி யட்சத்தில் சூரியன் நமக்குத்தெரிவதற்கும் உண்மையாக சூரியன் நிற்கும் நிலைக்கும் வித்தியாசமுண்டு என்பதை வானியல் நிபு ணர்கள் அறிவார்கள். வாயுவில் ஒளி முறிபுக்குணகத்தால் (Refractive Index of air) சூரியனின் உண்மை நிலைக்கும் தோற்ற நிலைக்கும் பேதமுண்டு. அன்றியும் முனி வர்கள் ராசிகளை வெறும் பௌதிகமுறை யில் பிரித்தார்களா அன்றி ஞானதிருஷ் டியில் கண்ட ஞாஞகாய முறைப்படி பிரித் தார்களா என்பது எவருக்கும் தெரியாது. அவர்கள் சூக்குமமான மனேதிருஷ்டியில் கண்ட ஞாஞகாயவடிவத்திலேயே கிரக நிலைகளைக் கொண்டு அதன்படியே சாஸ் திரங்களில் பலன் கூறியிருக்கிருர்கள். இந்த அடிப்படை மேல்நாட்டவருக்கும் மேல்நாட்டு வானியல் அடிப்படையாகக் கொண்டவருக்கும் புரியாது. உதாரண மாக சூக்குமபக்ஷி என்று பக்ஷிப்பலன் குறிப்பிட்டிருக்கிறது. இதில் கூறப்பட்ட ஆந்தை, வல்லூறு, காகம் கோழி, மயில் என்பன இந்த உலகில்காணும் ஆந்தை வல்லூறு காகம் கோழி மயில் முதலியன வைகளா? அல்லது ஞானதிருஷ்டியால் கண்டவைகளா? பிரத்தியட்சத்துக்குபலன் கூறுவதாஞல் இந்த பக்ஷிகளுக்கும் பிறந்த நட்சத்திரத்துக்கும் என்னதொடர்பு. மிரு கசீரிடநட்சத்திரத்துக்கு தினப்பக்ஷி கோழி என்று குறிக்கப்பட்டிருக்கிறது. நட்சத் திரப் பக்ஷி வல்லூறு என்று குறிக்கப்பட் டிருக்கிறது. இதன் அடிப்படையை பிரத்தி யட்சம் விளக்குமா? ஒரேநட்சத்திரத்திற்கு இரண்டு பட்சிகள் வீட்டில் தோன்றுமா?

எண்ணில்லாத நட்சத்திரங்கள் பிரத்தி யட்சமாகத் தோற்றவும் 27 நட்சத்திரங் களை மாத்திரம் சோதிடத்துக்கு பலன் சொல்லுவதற்கு எடுத்த மர்மம் என்ன? பிரத்தியட்சத்தின்படி சீரியஸ், கனேப்பஸ், வேகா, ரீயல் போன்ற மிக ஒளிவிடும் நட் சத்திரங்கள் இருக்கவும். அவற்றை தனி யாகப் பிரித்துப் பலன் கூருத நியாயம் என்ன?

சப்தரிஷிகள் என்று கூறப்பட்ட நட்சத் திரங்களை அறிந்தும் அவற்றை பலன்களில் சேராத மர்மம் என்ன? அவைகள் பிரத்தி யட்சத்தில் தோற்றப்படவில்லையோ? இன் னும் பூமிக்கே ஒளிவந்து சேராத எத்தனை யோ நட்சத்திரங்கள் அண்டவெளியில் உண்டு. அவைகளால் மனிதனுக்கு நற் பலன் இல்லையா?

ராகுகேதுக்கள் எந்த அட்சதேசாந்தரத் தில்பிரத்தியட்சமாகக் கண்டார்கள், ராகு கேது கிரகசஞ்சாரத்தை பிரத்தியட்சத்தில் பார்த்துத் திருத்திஞர்களா? குளிகன் முதலிய கிரகங்களுக்குப் பலன் கூறப்பட்டி ருக்கின்றனவே. இவைகளைப்பற்றிப்பிரத்தி யட்சமாகக் கண்டவர் யார்?

எனவே தோன்றுகின்ற பலகோடி நட்சத்திரங்களுக்குப் பலன் கூறுமலும் தோன்ருத கிரகங்களுக்குப் பலன் கூறியும் செல்லும் நமது இந்துசோதிடக்கலை பிரத்தியட்சக் காட்சியை அடிப்படையாகக் கொண்டது என்று யாரும் கூறினுல் அது வெறும் ஏமாற்றுவித்தை. எனவே இந்து சோதிடக்கலையை நம்புபவர்கள் பிரத்தியட்சத்துக்குச் சரி வருகின்றதென்ற கேலிக்கூத்தை ஒருபோதும் நம்பார்கள்.

கேள்வி: நெப்டியூன் யூருனஸ் போன்ற கிரகங்களுக்குக் கிரகநிலை குறிக்கப்பட்டுப் பலனும் கூறப்பட்டிருக்கிறது. இக்கிரகங்களுக்குப் பலனைச்சொல்ல ஏதாவது அடிப்படை உண்டா?

பதில்: யூருனஸ் நெப்டியூன் மாத்திரமன்றி புளூட்டோ என்ற கிரகமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. யூருனஸ் நெப்டியூனுக்கு பலன்சொல்லும் அடிப்படை உண்டானுல் புளூட்டோவுக்கு ஏன் அந்த அடிப்படையிற் பலன் சொல்லமுடியாது?

இந்து சோதிடமுறையிலோ பஞ்சாங்கக் கணிப்பிலோ யூரானசும் நெப்ரியூனும் இடம்பெறவில்லை. திருக்கணித பஞ்சாங்க ஆரம்பகாலங்களிலும் இக்கிரகங்களின் சஞ்சாரமோ அச்சஞ்சாரத்துக்கேற்ற பலனே இடம்பெறவில்லை. எனவே இது இப்போதைய திருக்கணிதர்களால் இடையில்புகுத்தப்பட்டது. இதற்குப் பலன் சொல்லும் அடிப்படையும் இவர்களின் சிருஷ்டியே. இப்பலன் சொல்லுகை அவர் கற்பனையில் எழுந்ததே. புளூட்டோவுக்கு இந்தக் கற்சரிவரவில்லைப்போலும் இனி ஒருவேளை கற்பனுசக்தி வேலைசெய்யலாம்.

இப்படிப்பட்ட அடிப்படையற்ற கற்பனைகளைப் பொதுமக்களுக்குத் துணிவாக வெளியிடும் மனத்தைரியம் நமக்கில்லை. அதனுல்தான் சோதிட சாஸ்திரங்களில் கூறப்பட்ட கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் பலன் சொல்லுகிருேம். சாஸ்திர அடிப்படை இல்லாதஎதையும் நமது கற்பனைப்படி குறிப்பிடமாட்டோம்.

———

## குலத்திற்கு அடையாளங்கள்

உபகாரம் செய்யாதவர்களுக்கும் உபகாரமே செய்வது: பிரியமாக இருப்பது செய்நன்றி மறக்காமல் இருத்தல்; விழுந்தவர்களைத் தூக்கி விடுதல், இவைகளே நற்குலத்தில் பிறந்தவர்களுக்கு அடையாளங்கள்.

## குற்றமற்றவர்

தாழைமலர் முட்கள் நிரம்பியது; தாமரை சேற்றில் முளைப்பது. விலைமகளைக் குட்டினி (குஷ்டம்) சூழ்ந்திருக்கிருள், நீரோட்டத்தின் குற்றம் இல்லாத ரத்தினம் ஏது?

# வைகாசிமாத
# படுபக்ஷி நாட்கள்

அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் இவைகளின் பக்ஷி வல்லூறு.

திருவாதிரை, புநர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், இவைகளின் பக்ஷி ஆந்தை.

உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம் இவைகளின் பக்ஷி காகம்.

அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம், இவைகளின் பக்ஷி கோழி.

திருவோணம், அவிட்டம், சதயம் பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி இவைகளின் பக்ஷி மயில்.

பூர்வபக்ஷ படுபக்ஷி

வல்லூறு—வியாழன், சனி
ஆந்தை—ஞாயிறு, வெள்ளி
காகம்—திங்கள்
கோழி—செவ்வாய்
மயில்—புதன்

அபரபக்ஷ படுபக்ஷி

வல்லூறு—செவ்வாய்
ஆந்தை—திங்கள்
காகம்—ஞாயிறு
கோழி—வியாழன், சனி
மயில்—புதன். வெள்ளி

அச்சுவினி தொடங்கி மிருகசீரிடம் ஈருக ஜெனித்தவர்கட்கு வைகாசி 2 (வியாழன்) 4 (சனி) 9 (வியாழன்) 11 (சனி) 16 (வியாழன்) இத் தேதிகள் எல்லாம் பூர்வபக்க படுபக்ஷி நாட்களாகும்.

திருவாதிரை தொடங்கி பூரட்டாதியீருக ஜெனித்தவர்கட்கு வைகாசி 5 (ஞாயிறு) 10 (வெள்ளி) 12 (ஞாயிறு) 31 (வெள்ளி) இத் தேதிகள் எல்லாம் பூர்வபக்க படுபக்ஷி நாட்களாகும்.

உத்தரம் தொடங்கி விசாகம் ஈருக ஜெனித்தவர்கட்கு வைகாசி 6 (திங்கள்) 13 (திங்கள்) இவையெல்லாம் படுபக்ஷி நாட்கள்.

அனுஷம் தொடங்கி உத்தராடம் ஈருக ஜெனித்தவர்கட்கு வைகாசி 7 (செவ்வாய்) 14 (செவ்வாய்) இவை இரண்டும் படுபக்ஷி நாட்கள்.

திருவோணம் தொடங்கி ரேவதி ஈருக ஜெனித்தவர்கட்கு வைகாசி 1 (புதன்) 8 (புதன்) 15 (புதன்) இவை எல்லாம் படுபக்ஷி நாட்கள்.

அபரபக்ஷம் படுபக்ஷி நாட்கள்

அச்சுவினி தொடங்கி மிருகசீரிடமீருக ஜெனித்தவர்கட்கு ஆனி 21 (செவ்வாய்) 28 (செவ்வாய்) இவை இருநாட்களும் படுபக்ஷி நாட்கள்.

திருவாதிரை தொடங்கி பூரட்டாதியீருக ஜெனித்தவர்கட்கு வைகாசி 20 (திங்கள்) 27 (திங்கள்) இவை இரண்டும் படுபக்ஷி நாட்கள்.

உத்தரம் தொடங்கி விசாகமீருக ஜெனித்தவர்கட்கு வைகாசி 19 (ஞாயிறு) 26 (ஞாயிறு) இவை இரண்டும் படுபக்ஷி நாட்கள்.

அனுஷம் தொடங்கி உத்தராடமீருக ஜெனித்தவர்கட்கு வைகாசி 23 (வியாழன்) 25 (சனி) 30 (வியாழன்) இவை மூன்றும் படுபக்ஷி நாட்கள்.

திருவோணம் தொடங்கி ரேவதி ஈருக ஜெனித்தவர்கட்கு வைகாசி 17 (வெள்ளி) 22 (புதன்) 24 (வெள்ளி) 29 (புதன்) இவை எல்லாம் படுபக்ஷி நாட்கள். இந்த நாட்களிற் பிரயாணம். விவாகம், ஆயுத அப்பியாசம் செய்தல், மற்றும் எவ்வித கருமமும் செய்தல் ஆகாவாம்.

### பெயர்ப்பக்ஷி

அ, ஆ — வல்லூறு

இ, ஈ — ஆந்தை

உ, ஊ — காகம்

எ, ஏ — கோழி

ஒ, ஓ — மயில்

### கூட்டுறவு

எல்லா உலோகங்களையும் உருக்கி ஒன்ருக்கிவிடலாம். விலங்குகளும் பறவைகளும் நிமித்தத்தால் ஒன்று கூடிவிடும், மூர்க்கர்கள் பயத்தாலும், பேராசையாலும் ஒன்றுகூடிவிடுவார்கள். நன்மக்களோ பார்வையிலே (அறிந்து) ஒன்று கூடிவிடுவார்கள்.

கீழோர், மண்பாண்டத்தைப்போல, சுலபமாகப் பிரிந்து விடுவார்; மறுபடியும் ஒன்றுசேர்வது முடியாது. மேலோரே தங்கப்பாத்திரம் போல், பிளவுபடமாட்டார்கள். பிளவுற்ருல் எளிதில் சேர்ந்துவிடுவார்கள்.

சிஷ்யர்களுடனும் இஷ்டர்களுடனும் கூடிக்கழிக்கும் நாட்கள், எப்போதோ ஒருசமயம் கிட்டுவதாயினும், வேறு எதுவும் இல்லாமல் வாழ்க்கையின் மீதியைக் கழிக்க வேண்டியவர்களுக்குக் கிட்டும் வழிச்செலவுப் பணம் போலாகும்.

### கோபம்

விஷயத்தின் உண்மையை அறியாமல் கோபப்படுகிறவன் சீக்கிரமாகவே தன் நண்பரை இழந்துவிடுவான்!

சாதுவுக்கு ரொம்பக் கோபமுண்டாளுலும் அவர் மனம் விகாரம் அடையாது. துரும்பைக் கொளுத்திக் கடல்நீரைச் சூடாக்கிவிடமுடியுமா?

| 4. ராகு. | | | 5. புதன் | | | 6. சுக். | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தி | வி. | பொ | தி | வி | பொ. | தி. | வி. | பெ. |
| 4 | 1 | 1 | 5 | 1 | 1 | 6 | 1 | 6 |
| 4 | 2 | 1 | 5 | 2 | 1 | 6 | 2 | 1 |
| 4 | 3 | 1 | 5 | 3 | 1 | 6 | 3 | 6 |
| 4 | 4 | 1 | 5 | 4 | 1 | 6 | 4 | 1 |
| 4 | 5 | 1 | 5 | 5 | 1 | 6 | 5 | 1 |
| 4 | 6 | 6 | 6 | 6 | 1 | 6 | 6 | 6 |
| 4 | 7 | 1 | 5 | 7 | 1 | 6 | 7 | 6 |
| 4 | 8 | 5 | 5 | 8 | 5 | 6 | 8 | 5 |
| 4 | 9 | 9 | 5 | 9 | 6 | 6 | 9 | 6 |

| 7. கேது | | | 8. சனி | | | 9. செவ். | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தி. | வி | பெ. | தி | வி. | பெ. | தி. | வி. | பெ. |
| 7 | 1 | 5 | 8 | 1 | 5 | 9 | 1 | 6 |
| 7 | 2 | 1 | 8 | 2 | 5 | 9 | 2 | 1 |
| 7 | 3 | 1 | 8 | 3 | 5 | 9 | 3 | 1 |
| 7 | 4 | 1 | 8 | 4 | 5 | 9 | 4 | 1 |
| 7 | 5 | 1 | 8 | 5 | 5 | 9 | 5 | 1 |
| 7 | 6 | 1 | 8 | 6 | 5 | 9 | 6 | 6 |
| 7 | 7 | 1 | 8 | 7 | 5 | 9 | 7 | 1 |
| 7 | 8 | 5 | 8 | 8 | 5 | 9 | 8 | 5 |
| 7 | 9 | 6 | 8 | 9 | 5 | 9 | 9 | 6 |

ஆரம்பம் : 1930

தொலைபேசி : 8083

# சோதிட விலாச புத்தகசாலை

46, பெரியகடை, யாழ்ப்பாணம்.

உலகின் சகல மக்களாலும் விரும்பி உபயோகிக்கப்படும்

## இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம்

## இரகு தினக்குறிப்பு

## தினக் கலண்டர், மாதக் கலண்டர்கள்

இரகுநாதையர் உரையுடன் கூடிய

விதானமாலை என்னும் சோதிட நூல்

சோதிட வினாவிடை, ஜாதக பாஸ்கரன்

மற்றும் சமய, சோதிட, வைத்திய நூல்களும்

மற்றும்

பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள்

முதலியனவும் எங்களிடம் கிடைக்கும்

எங்களிடம்

தமிழகத்திலிருந்து வெளியாகும்

சகல வார, மாத இதழ்களும்

தீபாவளி, பொங்கல், நத்தார், புதுவருட, பிறந்ததின வாழ்த்துக்களும்

பிரபல இந்திய எழுத்தாளர்களின் தமிழ் நூல்களும்

கலண்டர், டயறிகளும்

மற்றும்

யாழ்ப்பாணம் கொக்குவில் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம்

மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

# ராஜன் புத்தகசாலை

12, பஸ் நிலையம், * 57-A, நவீன சந்தை,

யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, சோதிடப்பிரகாச யந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்று. சோதிட பரிபாலினி ஆசிரியர் இ. வெங்கடேச ஐயர் அவர்களால் வெளியிடப்பெற்றது .